செ.வெ.எண்; 83 8/11/09

வேளாண்மை அமைச்சர் அலுவலகம்

பத்திரிக்கைச் செய்தி

மத்திய அரசின் 21.10.2009ஆம் நாளிட்ட அவசர சட்டத்தில் மாநில அரசுகள் கரும்புக்கான பரிந்துரை விலையை அறிவிக்கக் கூடாது எனவும், மத்திய அரசு அறிவிக்கும் நியாயமான மற்றும் ஆதாய விலையைத் தான் (Fair and Remunerative Price) கரும்பு ஆலைகள் வழங்க வேண்டும் எனவும், மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 9.5 சதம் சர்க்கரை பிழிதிறன் உள்ள ஒரு டன் கரும்புக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக (F R P) ரூ.1298.40 எனவும், ஒவ்வொரு 0.1 சத சர்க்கரை பிழிதிறனுக்கும் ரூ.13.70 எனவும் அறிவித்துள்ளது.

7.11.2009ஆம் நாளிட்ட தினமணி நாளிதழில் "கரும்பு விவசாயிகளை பாதிக்கும் மத்திய அரசின் உத்தரவை எதிர்க்காதது ஏன்" என கேட்டு அறிக்கை வெளியிட்டுள்ள ஜெயலலிதா, எனது விளக்கத்திற்கு பிறகாவது உண்மையை அறிந்து கொண்டு, கரும்பு விவசாயிகள் மீது அவருக்கு அக்கறை இருப்பதைப் போல அடிக்கடி அறிக்கை விடுவதை நிறுத்திக் கொள்வார் என எதிர்பார்க்கிறேன்.

கரும்புக் கட்டுப்பாட்டு சட்டம் 1966ன்படி, மத்திய அரசு அறிவிக்கும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை, தமிழக விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்பதால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சர்க்கரை ஆலை உரிமையாளர்களையும், விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை தனி அலுவலர்களையும் கொண்ட முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவித்து வழங்கி வருகிறது.

ஆனால், 2001ல் ஆட்சிக்கு வந்த அ.இ.அ.தி.மு.க. 5 ஆண்டு காலம் முத்தரப்பு கூட்டத்தை கூட்டி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் தனி அலுவலர்களின் கருத்துக்களை கேட்டு முடிவெடுக்காமலேயே, மத்திய அரசு நிர்ணயித்த விலையை மட்டுமே வழங்கி வந்ததை கரும்பு விவசாயிகள் அனைவரும் அறிவார்கள்.

5 ஆண்டு காலமாக மத்திய அரசின் விலையோடு மாநில அரசின் பரிந்துரை விலையும் சேர்த்து கரும்பு விவசாயிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் வழங்காமல், தி.மு.க. ஆட்சியில் 8.5. சத சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு 2000–2001ல் மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவித்து வழங்கிய ரூ.775/–ஐ மட்டுமே வழங்கி வந்ததை மறைப்பதற்கு, விவசாயிகள் மீது ஏதோ அக்கறை கொண்டவரைப் போல இப்போது அறிக்கை விட்டுக் கொண்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

2009–2010ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 9.5 சதம் சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1077.60/–ம் ஒவ்வொரு 0.1 சர்க்கரை பிழிதிறனுக்கும் ரூ.11.30/–ம் அளிப்பது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாது என மாநில அரசு கருதியதால், பரிந்துரை விலையாக ரூ.359.80/– ஐ கூட்டி மாநில அரசின் பரிந்துரை விலையாக 9.5 சத சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1437.40 என்றும், சராசரி பிழிதிறன் அடிப்படையில் கூடுதலாக ரூ.22.60/–எனவும், வண்டி வாடகையாக டன் ஒன்றுக்கு ரூ.90/–ம் சேர்த்து ஆகமொத்தம் ஒரு டன் கரும்புக்கு சராசரியாக ரூ.1550/– வழங்கி வருபவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில், மத்திய அரசின் முடிவின்படி 9.5 சதம் சர்க்கரை பிழிதிறன் உள்ள ஒரு டன் கரும்புக்கு நியாயமான மற்றும்

ஆதாய விலையாக (FRP) ரூ.1298.40/– என்று அறிவித்திருப்பதால், தமிழக அரசு ஏற்கனவே அறிவித்த விலையை விட ரூ.139/– குறைவாக விவசாயிகள் பெற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், அதனால் ரூ.1298.40/–உடன் மாநில அரசின் கூடுதல் விலை ரூ.359.80/–ஐ சேர்த்து ரூ.1658.20/– வழங்க வேண்டுமென அறிக்கை விட்டிருப்பது விவசாயிகளை ஏமாற்றலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற காரியமே தவிர, அவர் மனதார இந்த அறிக்கை விட்டிருக்கமாட்டார் என்று கருதுகிறேன்.

மத்திய அரசு 9.5 சதம் பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1298.40 என விலை நிர்ணயம் செய்து அறிவிப்பதற்கு முன்பே, நமது மாநிலத்தில் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை தனி அலுவலர்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு டன் கரும்புக்கு ரூ.1550/–விலை கிடைக்க 29.9.2009ல் ஆணையிட்டிருப்பதும், அதைத்தான், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளும் வழங்கும், தனியார் ஆலைகளும் நிச்சயமாக வழங்குவார்கள். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

இப்போது மத்திய அரசு அறிவித்திருப்பதை ஏன் எதிர்க்கவில்லை என்று முன்னாள் முதலமைச்சர் கேட்கிறார். கரும்புக்கான, நியாயமான மற்றும் ஆதாய விலையை (FRP) திராவிட முன்னேற்றக் கழக அரசானது ஏற்றுக் கொள்ளவில்லை எனறாலே, மத்திய அரசினுடைய முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் பொருள். தி.மு.க. அரசின் கருத்தை மத்திய அரசுக்கு தெரிவிப்போம் என்பதை வேளாண்மைத்துறை அமைச்சர் என்ற முறையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்போது மத்திய அரசின் விலையோடு, மாநில அரசின் பரிந்துரை விலையும் சேர்த்து 2009–2010ஆம் ஆண்டிற்கு 9.5 சத சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1437.40ம், கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 பிழிதிறனுக்கு ரூ.11.30/–ம் வாகன வாடகையாக ரூ.90/–ம் சேர்த்து, கள்ளக்குறிச்சி–II கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.1640.40ம், திருப்பத்தூர் மற்றும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.1708.20ம், தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.1730.80ம், வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையை எல்லாம் அறியாமல் ஊரையும், விவசாயிகளையும் ஏமாற்றலாம் என்ற முயற்சியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கை விட்டுக் கொண்டிருப்பது எப்படி இருக்கிறதென்றால், “தூங்குபவனை எழுப்பலாம், ஆனால் தூங்குவதைப் போல் நடிப்பவனை எழுப்ப முடியாது” என்பதைப் போலத்தான் இருக்கிறது.

வேளாண்மைத் துறை அமைச்சர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009

7-11-09

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9